# மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம்

★

மா ஸே - துங்

★

யுகப் பதிப்பகம்
சென்னை—4

[illegible],4 N21
N49
182125

[விலை அணா 2

1949 ஜுலை 1-ல் கொண்டாடப்பட்ட சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் 28-வது ஆண்டு விழாவின் ஞாபகார்த்தமாக தோழர் மா ஸே - துங் எழுதிய கட்டுரையே இச்சிறிய நூலாக வெளிவருகிறது. (ப-ர்)

கிடைக்குமிடம் :

**பீப்பிள்ஸ் பப்ளிஷிங் ஹவுஸ்,**

(புருஷோத்தம் பில்டிங்ஸ்)

மவுண்ட் ரோட், சென்னை—2

# மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம்

1949, ஜூலை முதல் தேதியன்று சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு 28-ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. ஒரு மனிதனின் வாழ்க்கையைப் போல், அதனுடைய வாழ்க்கையிலும் பிள்ளைப் பிராயம், இளமை, முதிர்ச்சி, முதுமை என்னும் பல பருவங்கள் ஏற்படுகின்றன. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை இனி ஒரு சிறு பிள்ளை யென்றோ அல்லது ஒரு இளைஞன் என்றோ கருதமுடியாது. அது வயது முற்றி காளைப் பருவமடைந்து விட்டது. வயதான கிழவனாகியதும், மனிதன் இறந்து விடுகிறான். கட்சிகளுக்கும் இதே முடிவுதான் ஏற்படுகிறது. வர்க்கங்கள் மறைந்தொழியும்பொழுது, அதன் விளைவாய், வர்க்கப் போராட்டக்கருவியான அரசியல் கட்சிகளும், அரசாங்க இயந்திரமும் தங்கள் வேலைகளை இழந்து, தேவையற்றதாகி, சிறிது சிறிதாக மறைகின்றன. சரித்திரபூர்வமான தங்கள் பணியைச் செய்து முடித்த பின்னர் மனித சமூகத்தில் மேலும் ஓர் உயர்ந்த கட்டத்திற்கு இடமளித்துவிட்டு அவை மறைந்துவிடுகின்றன.

## கம்யூனிஸ்டுகளின் கண்ணோட்டம்

நமது கட்சி பூர்ஷ்வா வர்க்க அரசியல் கட்சிகளிலிருந்து அறவே மாறுபட்டதாகும். பூர்ஷ்வா வர்க்க கட்சிகள், வர்க்கங்கள், அரசாங்க அதிகாரம், கட்சிகள் ஆகியவற்றின் மறைவுபற்றி பேசுவதற்கு அஞ்சுகின்றன. ஆனால் நாம் இந்த அம்சங்கள் அகற்றப்படுவதைத் துரிதமாக்கக்கூடிய நிலைமைகளைச் சிருஷ்டிக்கும் பொருட்டு ஒரு உறுதியான போராட்டத்தை நடத்தி வருகிறோமென்று வெளிப்படையாக பிரகடனம் செய்கிறோம். கம்யூனிஸ்ட் கட்சியும் மக்கள் சர்வாதிகாரத்தின் அரசாங்க அதிகாரமும் இந்த நிலைமைகளை நமக்களிக்கின்றன. இவ்வுண்மையை ஏற்றுக்கொள்ளத் தவறுபவர்கள் கம்யூனிஸ்ட்டுகள் ஆகமாட்டார்கள். கட்சியில் சேர்ந்து அதிக காலமாகாத, மேலும் மார்க்சிஸம்-லெனினிஸத்தின் அடிப்படைகளை இன்னும் கற்றறியாத இளந் தோழர்கள் இவ்வுண்மையை உணராமலிருக்கக் கூடும். ஆனால் அவர்கள் நிஜமாகவே ஒரு உலக கண்ணோட்டத்தைப் பெறவேண்டுமானால், இவ்வுண்மையை அவர்கள் உணர்ந்து கொள்வது அவசியமாகும். வர்க்கங்களும் அரசாங்க அதிகாரமும்

கட்சிகளும் மறைந்தொழியும் பாதையில் மனிதவர்க்கம் முழுமையும் சென்றுதான் ஆகவேண்டுமென்பதையும், அதற்கான காலமும் நிலைமைகளும் என்ன என்பதொன்றுதான் நம்முன்னுள்ள கேள்வியாகுமென்பதையும் அவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

உலகெங்கும் கம்யூனிஸ்ட்கள் பூர்ஷ்வா வர்க்கத்தினரைவிட மிகவும் முன்னேற்ற மடைந்துள்ளவர்களாவர். நிகழ்ச்சிகளின் வளர்ச்சி சம்பந்தமான விதிகளை கம்யூனிஸ்ட்கள் உணருகின்றனர். தர்க்க இயலை அறிந்துள்ளனர். முன்னோக்கி வெகு தூரத்திற்குப் பார்க்கும் சக்தி பெற்றுள்ளனர். ஆனால் பூர்ஷ்வா வர்க்கத்தினர் இவ்வுண்மையைப் பார்க்கப் பிரியப்படவில்லை. ஏனெனில் மக்களால் தாங்கள் விலக்கித் தள்ளப்பட்டு விடுவதை அவர்கள் விரும்பவில்லை. நாம் எப்படி கோமிண்டாங் பிற்போக்குவாதிகளை இப்பொழுது வீழ்த்தி விரட்டியுள்ளோமோ, நமது மக்களும் மற்றும் பல நாடுகளிலுள்ள மக்களும் எப்படி ஜப்பானிய ஏகாதிபத்தியத்தைச் சமீபத்தில் வீழ்த்தி விரட்டினார்களோ, அதே முறையில் தாங்களும் வீழ்த்தி விரட்டப்பட்டு விடக்கூடும் என்னும் எண்ணம் அவர்களைத் துன்புறுத்தி வேதனை செய்கிறது. தொழிலாளி வர்க்கத்தையும், உழைப்பாளி மக்களையும், கம்யூனிஸ்ட்களையும் எதிர்நோக்கும் பிரச்னை வீழ்த்தி விரட்டப்பட்டு விடலாமென்பதல்ல. பிடிவாதமாய் முழுமூச்சுடன் வேலை செய்யவேண்டும்; மனித வர்க்கம் உலக கம்யூனிஸத்தை நோக்கி முன்னேறும் பொருட்டு, வர்க்கங்களும் அரசாங்க அதிகாரமும், அரசியல் கட்சிகளும் இயல்பாகவே மறைந்து போவதற்கான நிலைமைகளைச் சிருஷ்டிக்கவேண்டும் என்பதுதான் இவர்கள் முன்னுள்ள பிரச்னையாகும்.

## முன்னேற்றமடைய சீனப் போராட்டம்

கீழ்க் கண்ட பிரச்னைகளைத் தெளிவுபடுத்தும் பொருட்டு நாம் மனிதவர்க்கத்தின் வளர்ச்சி பற்றி மேலே கூறினோம். நம்முடைய கட்சிக்கு இப்பொழுது 28 வயதாகிவிட்டது. இந்த 28 ஆண்டுகளும் கஷ்டங்கள் மிகுந்திருந்த ஆண்டுகளாகுமேயன்றி சமாதானம் நிலவிய ஆண்டுகளல்ல வென்பது எல்லோருக்கும் தெரியும். உள்நாட்டு விரோதிகளையும் வெளிநாட்டு விரோதிகளையும், கட்சியினுள்ளும் அதன் அணிகளுக்கு வெளியேயுமிருந்த விரோதிகளையும் நாம் எதிர்த்துப் போராடவேண்டி யிருந்தது. போராடுவதற்கு நமக்கு ஓர் ஆயுதத்தைக் கொடுத்ததற்காக, மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோருக்கு நாம் கடமைப் பட்டிருக்கிறோம். இவர்கள் நமக்குக் கொடுத்த ஆயுதம் இயந்திர துப்பாக்கியல்ல. மார்க்சிஸம்—லெனினிஸமென்னும் ஆயுதத்தை இவர்கள் கொடுத்தார்கள். 1920-ல் எழுதப்பட்ட “இடதுசாரி” கம்யூனிஸம்—ஒரு இளம் பருவ வியாதி (“Left-Wing” Communism—An Infantile Disorder) என்னும்

தன் புத்தகத்தில் ரஷ்யர்கள் எப்படி ஒரு புரட்சிகரத் தத்துவத்தை சிருஷ்டித்தன ரென்பதை லெனின் விவரித்தார். பல ஆண்டுகள் கஷ்டங்களுக்கும் சோதனைகளுக்கும் உட்பட்டு இறுதியாக அவர்கள் மார்க்சிஸத்திற்கு வந்து சேர்ந்தார்கள். சீன நிலைமைக்கும் புரட்சிக்கு முற்பட்ட ரஷ்யாவின் நிலைமைக்கும் பொதுவான அல்லது ஒருமித்த அம்சங்கள் பல உள்ளன. பிரபுத்துவ அடக்குமுறை ஒரே மாதிரியாகத்தானிருந்தது. இருநாடுகளும் பொருளாதார கலாச்சாரத் துறைகளில் பின்தங்கி யிருந்தன. இரண்டும் பின்தங்கி யிருந்தன வென்ற போதிலும், ரஷ்யாவைவிட சீனம் அதிக அளவிற்குப் பின்தங்கி இருந்தது. தேசத்தைப் புனர் நிர்மாணம் செய்யும் பொருட்டு புரட்சிகர உண்மையைக் கண்டு பிடிப்பதற்கு முற்போக்கு வாதிகள் கடுமையான போராட்டத்தை நடத்தினார்கள்; இது இரண்டு நாடுகளிலும் காணப்பட்ட பொதுவான ஒரு அம்சமாகும்.

1840-ல் அபினி யுத்தத்தில் சீனம் தோல்வியுற்ற பின், முற்போக்குடைய சீனமக்கள் பலர் மேற்கத்திய நாடுகளில் உண்மையைக் கண்டறிய முயன்றபொழுது கணக்கற்ற கஷ்டங்களுக்கு ஆளாகினர். ஹன் சியூ—சுவான், கான் யூ—வி, யான் பூ, சன் யாட்—சன் ஆகியோர், சீன கம்யூனிஸ்ட் கட்சி பிறக்கு முன்பு, மேற்கு நாடுகளில் உண்மையைத் தேடிப் பிடிக்க முயற்சித்த இந்த கோஷ்டியின் பிரதிநிதிகளாக விளங்கினர். முன்னேற்றமடைய வேண்டுமென ஆசைப்பட்ட சீனர்கள் யாவரும் அக்காலத்தில் மேற்கு நாடுகளின் புதிய போதனைகள் எடுத்துரைத்தவை அனைவற்றையும் படித்தனர். கல்வி பயிலுவதற்கு ஏராளமானவர்கள் ஜப்பானுக்கும் இங்கிலாந்திற்கும் அமெரிக்காவிற்கும், பிரான்சுக்கும், ஜர்மெனிக்கும் சென்றனர். மேற்கு நாடுகளிலிருந்து கற்றுக்கொள்வதற்கு சகல வழிகளிலும் முயற்சி செய்யப்பட்டது. அதிகார வர்க்கத்தின் பழைய பரீட்சை முறை ஒழிக்கப்பட்டது. பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை அதிகரித்தது. நானும் என்னுடைய இளமைப் பருவத்தில் இம்மாதிரிதான் கல்வி பயின்றேன். இவை யாவும் மேற்கத்திய பூர்ஷ்வா ஜனநாயகத்தின் கலாச்சாரமாக விளங்கின. இவை "புதிய கருத்துக்கள்" என்று அழைக்கப்பட்டன. அக் காலத்திய சமூக விஞ்ஞானங்கள், இயற்கை விஞ்ஞானங்கள் ஆகியவற்றின் கோட்பாடும் இவற்றுள் அடங்கியிருந்தன. இவை சீன பிரபுத்துவத்தின் கலாச்சாரத்திற்கு, "பழங்கால கருத்துகள்" என்று அழைக்கப்பட்ட அந்த கலாச்சாரத்திற்கு நேர்முரணாக இருந்தன.

## மேற்கு நாடுகளும், சீனவும்

புதிய அறிவை பெற்றிருந்தவர்கள் யாவரும் இந்த "புதிய கருத்துகள்" மூலம் சீனத்திற்கு விடுமோட்சம் ஏற்படுமென்று நிச்சயமாக நம்பினார்கள். "பழங்கால கருத்துகளை"ப் பின்பற்றியவர்

களைத் தவிர, "புதிய கருத்துகளைச்" சேர்ந்தவர்கள் யாவரும் இதைப் பற்றிச் சிறிதும் ஐயமின்றி இருந்தனர். சீர் திருத்தங்களை செய்து முடிப்பதுதான் நாட்டைக் காப்பாற்றுவதற்கான ஒரே ஒரு வழியாகுமென்றும், இதன் பொருட்டு அன்னிய நாடுகளிலிருந்து கற்றுக் கொள்வது அவசியமாகுமென்றும் இவர்கள் கருதினார்கள். அக்காலத்திலிருந்த அன்னிய நாடுகளுள் மேற்கத்திய பூர்ஷ்வா நாடுகள் மட்டும்தான் முற்போக்கான நாடுகளாக இருந்தன. இந்த நாடுகள் நவீன பூர்ஷ்வா அரசாங்கத்தைக் கட்டியமைத்திருந்தன. மேற்கு நாடுகளிலிருந்து கற்றுக்கொண்டதின் வாயிலாக ஜப்பானியர்கள் உன்னதப் பலன்களை சாதித்தனர். அக்காலத்தில் சீனர்களுக்கு ரஷ்யா ஒரு பின் தங்கிய நாடாகவே இருந்தது. ஆகவே ஒரு சிலர் மட்டும்தான் ரஷ்யாவிடமிருந்து கற்றுக்கொள்ள விரும்பினர். இவ்வாறு 1840-க்குப் பிற்பட்ட ஆண்டுகளிலிருந்து 20-ம் நூற்றாண்டின் ஆரம்பம் வரையிலும் சீனர்கள் அன்னிய நாடுகளிடமிருந்து போதனை பெற்று வந்தனர்.

மேற்கு நாடுகளிடம் கற்றுக்கொள்ளலாமென நினைத்த சீனர்களின் நம்பிக்கைகளை ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு உடைத்தெறிந்து விட்டது. உண்மையிலேயே விசித்திரமானதல்லவா இது? ஆசிரியர்களாயிருப்பவர்கள் தங்கள் மாணாக்கர்களை சதாகாலமும் சூறையாடுவதேன்? சீனர்கள் மேற்கு நாடுகளிடமிருந்து மிகுந்த அளவிற்குக் கற்றுக்கொண்டனர். ஆனால் அவர்களால் தாங்கள் கற்றுக் கொண்டதனைத்தையும் நடைமுறை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வர முடியவில்லை. அவர்களால் தங்களுடைய லட்சியங்களைக் கைகூடும்படிச் செய்வதற்கு இயலவில்லை. பல சமயங்களிலும் அவர்களுடைய போராட்டம், 1911-ம் ஆண்டு புரட்சியைப் போன்ற ஒரு இயக்கங்கூட, தோல்வியடையும்படி நேர்ந்தது. நாளுக்கு நாள் நாட்டின் நிலைமை சீர்கேடுற்று வந்தது. மக்கள் இனி உயிர் வாழ முடியாதென்னும் அளவிற்கு நிலைமை மோசமாயிற்று. சந்தேகங்கள் கிளம்பின. மென்மேலும் இச் சந்தேகங்கள் வலுவடைந்தன.

## சீனாவும், அக்டோபர் புரட்சியும்

முதல் உலக யுத்தம் உலகம் பூராவையும் அதிரச் செய்தது. ரஷ்யர்கள் அக்டோபர் புரட்சியை நடத்தினார்கள்; உலகத்தில் முதன் முதலாக ஒரு சோஷலிஸ்ட் நாட்டை சிருஷ்டித்தனர். லெனின், ஸ்டாலின் தலைமையின் கீழ், மகத்தான ரஷ்ய தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர சக்தி, உழைப்பாளி மக்கள் அனைவரின் புரட்சிகர சக்தி—இதுவரை அன்னியர் கண்ணில்படாமல் தூங்கிக்கொண்டிருந்த இந்த சக்தி—திடீரென ஒரு எரிமலையைப்போல் பீரிட்டு வெடித்தது. அதன்பின் சீனர்கள் உள்பட, மனிதவர்க்கம் அனைத்துமே, ரஷ்யர்களை வேறு விதமாகக் கருதத் தலைப்பட்டனர். இதற்குப்

பின்புதான், சித்தாந்தத் துறையில் ஈடுபட்டிருந்த சீனர்கள் அறவே புதியதோர் சகாப்தத்தினுள் பிரவேசிக்கலாயினர்; உலகெங்கும் கையாளப்படக் கூடிய, சகல இடங்களுக்கும் ஏற்றதான மார்க்சிஸம், லெனினிஸத்தின் பிரபஞ்ச உண்மையை சீனர்கள் கண்டறிந்தனர். சீனத்தின் உருவமும் மாற்றமடைந்தது. மார்க்சிஸத்தை ரஷ்யர்கள் கையாண்டதின் விளைவாக அதை சீனர்களும் பெற்றுக்கொண்டனர். அக்டோபர் புரட்சிக்கு முன்பு லெனினையும் ஸ்டாலினையும் சீனர்களுக்குத் தெரியாது; மார்க்ஸ், எங்கல்ஸ் பற்றியும் சீனர்கள் கேட்டது கிடையாது. அக்டோபர் புரட்சியின் வெடி முழக்கம் நமக்கு மார்க்சிஸம்-லெனினிஸத்தை அளித்தது. சீனத்துக்கும் மற்றும் உலகம் பூராவிலுமுள்ள முற்போக்கு அம்சங்களுக்கும், நாட்டின் தலைவிதியை நிர்ணயிப்பதற்கும், தங்களுடைய சொந்த பிரச்னைகளைப் பரிசிலனை செய்வதற்கும் தொழிலாளி வர்க்க உலகக் கண்ணோட்டத்தைக் கையாளுவதற்கு அக்டோபர் புரட்சி உதவி புரிந்தது. இதனால் ஏற்பட்ட முடிவு என்னவென்றால் ரஷ்யர்கள் பின்பற்றிய பாதையில் நாமும் முன்னேறிச் செல்லவேண்டுமென்பதே.

1919-ல் சீனத்தில் "மே நாலாம் தேதி" இயக்கம் கிளம்பிற்று. 1921-ல் சீன கம்யூனிஸ்ட் கட்சி அமைக்கப்பட்டது. சன் யாட்-சன் நம்பிக்கை யிழந்து நின்ற ஒரு நேரத்தில் அக்டோபர் புரட்சி நடந்தேறியது; சீன கம்யூனிஸ்ட் கட்சியும் அமைக்கப்பட்டது. சன் யாட்—சன் அக்டோபர் புரட்சியை வரவேற்றார். சீன மக்களுக்கு ரஷ்யர்கள் அளித்த உதவியை வரவேற்றார்; சீன கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஒத்துழைப்பு ஏற்படுவதை வரவேற்றார்.

சன் யாட்-சன் இறந்தார்; சியாங் கே-செயிக் அதிகாரத்திற்கு வந்தான். இருபது ஆண்டுகளில் சியாங் கே-செயிக் சீனத்தை மிகக் கொடிய வறுமையில் ஆழ்த்தினான். இந்த காலகட்டத்தில் மூன்று பெரிய ஏகாதிபத்திய அரசுகள், பாசிஸ்ட்—எதிர்ப்பு யுத்தத்தில், சோவியத் யூனியன் பிரதான சக்தியாக விளங்கிய இந்த யுத்தத்தில், ஒழிக்கப்பட்டு விட்டன; மற்றும் இரண்டு பெரிய ஏகாதிபத்திய அரசுகள் பலவீனமாக்கப் பட்டுவிட்டன; ஒரே ஒரு பெரிய ஏகாதிபத்திய அரசுதான், அமெரிக்கா ஒன்றுதான், சேதங்களின்றி தப்பியது. இருந்த போதிலும் அமெரிக்காவின் உள்நாட்டு நெருக்கடி மிகக் கடுமையான தன்மை வாய்ந்ததாகும். அமெரிக்கா உலகத்தை அடிமைப்படுத்திவிட விரும்புகிறது. சியாங் கே-செயிக்கிற்கு ஆயுத மனுப்பியதன் மூலம் அது பலகோடி சீனர்களைக் கொன்று குவிக்க உதவி செய்தது.

சீனகம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின்கீழ் சீனமக்கள் ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகளை விரட்டியடித்தபின், மூன்று ஆண்டுகளுக்கு மக்கள் விடுதலை யுத்தம் ஒன்றை நடத்தி அமோகமான வெற்றியைப் பெற்றனர். இவ்விதம் சீனமக்களின் கண்களில் மேற்

கத்திய பூர்ஷ்வா வர்க்கமும், பூர்ஷ்வா ஜனநாயகமும், பூர்ஷ்வா குடியா சும் ஒன்றுக்கும் உதவாத செல்லாக் காசுகளாகுமென்பது புலப்பட்டது. பூர்ஷ்வா ஜனநாயகம் மதிப்பிழந்தது. அதற்குப் பதில் தொழிலாளி வர்க்கம் தலைமை வகிக்கும் மக்கள் ஜனநாயகம் மலர்ந்தது. பூர்ஷ்வா குடியரசிற்கு பதிலாக மக்கள் குடியரசு தோன்றியது. இவ்வாறு மக்கள் குடியரசின் மூலம் சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையுமடைவதற்கான பாதை—வர்க்கங்களை ஒழித்துவிட்டு, உலக கம்யூனிசத்தைப் பெறுவதற்கான பாதை—சிருஷ்டிக்கப்பட்டது. உலக கம்யூனிசத்தைப் பற்றி காங் யூ-வி ஒரு புத்தகம் எழுதினார். ஆனால் உலக கம்யூனிசத்திற்கு அழைத்துச் செல்லும் பாதையை அவர் கண்டு பிடிக்கவில்லை. அப்பாதையை அவர் கண்டு பிடிப்பதென்பது முடியாத காரியமாக இருந்தது. பூர்ஷ்வா குடியரசென்பது அன்னிய நாடுகளில் இயங்கிற்று. ஆனால் அது சீனத்தில் இயங்க முடியவில்லை. ஏனெனில் சீனம் ஏகாதிபத்திய வாதிகளால் ஒடுக்கப்பட்ட ஒரு நாடாக இருந்தது. வர்க்கங்களை ஒழிப்பதற்கான ஒரே ஒரு பாதை, உலககம்யூனிசத்தை அடைவதற்கான ஒரேஒரு பாதை, தொழிலாளி வர்க்கத் தலைமையின்கீழ் இயங்கும் மக்கள் குடியரசின் வழியே செல்கிறது. மற்ற பாதைகள் யாவும் பரீட்சித்துப் பார்க்கப்பட்டு விட்டன; யாவும் தோல்வியில் முடிவுற்றன.

## சீனக் கம்யூனிஸ்ட் கட்சி உதயமாகிறது

மற்றெந்த போதனைகளையும் பின்பற்றியவர்கள் தோல்வியடைந்து, தங்களுடைய தவறுகளை ஏற்றுக்கொண்டுவிட்டனர்; அல்லது அவர்கள் தங்களுடைய அபிப்பிராயங்களை இப்பொழுது திருத்தி யமைத்துக்கொண்டு வருகின்றனர். பலருக்கு ஒன்றும் விளங்காத ஒரு நிலைமை ஏற்படுமளவிற்கு, அவர்கள் எதிர்பாராத வண்ணம் நிகழ்ச்சிகள் மிக துரிதமாக வளர்ந்தன. திரும்பவும் புதிதாகக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று இவர்கள் விரும்புவது இயற்கையே. புதிதாகக் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற இந்த விருப்பத்தை நாங்கள் வரவேற்கிறோம். அக்டோபர் புரட்சிக்குப் பின், சீனத் தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப்படை மார்க்சிஸம்-லெனினிஸத்தைக் கற்றுக்கொண்டது; சீன கம்யூனிஸ்ட் கட்சியை சிருஷ்டித்தது. இதன் பின்பு சீனத் தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் படை அரசியல் போராட்டத்தில் இறங்கியது; 28 ஆண்டுகள் மிக சிக்கலான ஒரு பாதையில் சென்றபின்னர் வெற்றியை அடைந்தது.

சன்யாட்-சனின் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "40 ஆண்டுகளின் அனுபவத்"திலிருந்து எழும்புவது போலவே, இந்த 28 ஆண்டுகளின் அனுபவத்திலிருந்தும் பொதுவான ஒரு முடிவு எழும்புகிறது:— "வெற்றியடைவதற்கு பெருவாரியான மக்களை

நாம் தட்டியெழுப்ப வேண்டும்; நம்மை ஒரு சரிநிகர் சமானமான தேசமாக நடத்தும் உலக மக்களுடன் பொதுவான போராட்டத்தில் நாம் ஒன்றுபட்டு நிற்கவேண்டும் என்னும் உறுதியான நம்பிக்கையே" அந்த முடிவு. சன் யாட்-சன்னுடைய உலக கண்ணோட்டம் நம்முடைய கண்ணோட்டத்திலிருந்து மாறுபட்டதாயிருந்தது. பிரச்னைகளை தீர்மானிக்கும்பொழுதும், அவற்றைப் பைசல் செய்யும் பொழுதும் அவர் ஒரு மாறுபட்ட வர்க்கப் பார்வை முறையைக் கையாண்டார். ஆனால் 20-ம் நூற்றாண்டில் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போராடுவது பற்றிய விஷயத்தில், பிரதான அம்சங்களில் நம்முடைய முடிவுடன் ஒத்திருந்த ஒரு முடிவிற்கு அவர் வந்து சேர்ந்தார்.

சன் யாட்-சன் இறந்து 24 ஆண்டுகள் கழிந்துவிட்டன. இக்காலத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ் சீனத்தின் புரட்சிகர தத்துவமும் நடைமுறையும் மாபெரும் அளவிற்கு முன்னேற்ற மடைந்துள்ளன. சீனத்தின் உருவத்தில் அடிப்படையான மாறுதலை உண்டுபண்ணி யுள்ளன. இன்று இரண்டு அடிப்படையான விஷயங்களில் சீன மக்கள் பாண்டித்தியம் பெற்றுள்ளனர்:—

1. நாட்டிலுள்ள பெருவாரியான மக்களைத் தட்டி யெழுப்புவது. இதன் பொருள் என்ன வென்றால், தொழிலாளி வர்க்கத்தையும் விவசாயி வர்க்கத்தையும் குட்டி பூர்ஷ்வாக்களையும் தேசபக்த பூர்ஷ்வா வர்க்கத்தினரையும் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் ஒரு ஐக்கிய அணியில் ஒன்றுபடுத்தி, தொழிலாளி வர்க்கத்தின் தலைமையிலும் தொழிலாளர் விவசாயிகள் கூட்டணியின் அடிப்படையிலும் மக்கள் ஜனநாயகத்தின் சர்வாதிகாரத்தை நிருவுவதென்பதே.

2. நம்மை ஒரு சரிநிகர் சமானமான நாடாகக் கருதும் உலக நாடுகளுடனும், சகல நாடுகளிலுமுள்ள மக்களுடனும் ஒன்றுபட்டு நிற்பது. இதன் பொருள் என்னவென்றால், சோவியத் யூனியனுடனும், ஐரோப்பாவிலுள்ள மக்கள் ஜனநாயகங்களுடனும், மேலும் மற்ற நாடுகளிலுள்ள தொழிலாளி வர்க்கத்துடனும், பொதுஜனப் பகுதிகளுடனும் ஒரு சர்வதேச ஐக்கிய அணியை அமைக்கும் பொருட்டுக் கூட்டணி நிருவிக்கொள்ளுதல் என்பதே.

## சில கேள்விகளும், பதில்களும்

"ஒரு பக்கத்தை நோக்கி நீங்கள் வளைந்து விடுகிறீர்கள்" என்று சிலர் நம்மிடம் கூறுகிறார்கள். ஆம், அப்படித்தான். சன்யாட்-சனின் 40 ஆண்டு அனுபவமும் கம்யூனிஸ்ட் கட்சியின் 28 ஆண்டு அனுபவமும் நிரூபித்துக் காட்டி நம்முடைய மனதில் பதியும்படிச் செய்திருப்பது இதுதான்: வெற்றியைப் பெற்று, அவ்வெற்றியை மேலும் பல

மடையச் செய்யும் பொருட்டு நாம் ஒரு பக்கத்தைப் பின்பற்றியாக வேண்டும். 40 ஆண்டுகளின் அனுபவமும், 28 ஆண்டுகளின் அனுபவமும், சீனமக்கள், விதி விலக்கின்றி, ஏகாதிபத்தியத்தின் பக்கமாவது அல்லது சோஷலிசத்தின் பக்கமாவது சேர்ந்தே ஆகவேண்டுமென்பதைத்தான் காட்டுகிறது. இவற்றின் நடுவே இருக்கலாமென்பது கைகூடாத காரியமாகும். மூன்றாவது வழி ஒன்றும் கிடையாது. ஏகாதிபத்தியத்தை நோக்கி வளைந்து நிற்கும் சியாங்கே-செயிகின் பிற்போக்குக் கும்பலை எதிர்த்து நாம் போராடி வருகிறோம்; அதே போல்மூன்றாவது பாதையைப் பற்றிய இந்த பிரமையையும் நாம் எதிர்த்து நிற்கிறோம். சீனத்தில் மட்டுமின்றி, உலகெங்குமே விதி விலக்கின்றி காணப்படுவதென்னவென்றால், ஒன்று ஏகாதிபத்தியத்திற்கு ஆதரவாக இருக்கமுடியும், அல்லது சோஷலிசத்திற்கு ஆதரவாக இருக்க முடியும் என்பதே. நடு நிலைமை என்பது ஏமாற்று வித்தையாகும், முகமூடியாகும். மூன்றாவது பாதை எதுவும் கிடையாது.

"நீங்கள் பிறநக்த அதிக ஆத்திரத்தை மூட்டுகிறீர்கள்" என்று நம்மிடம் சிலர் கூறுகிறார்கள். நம் முன்னுள்ள கேள்வி என்னவென்றால், சீனப் பிற்போக்குவாதிகள், அன்னிய பிற்போக்குவாதிகள் ஆகியோரையும், அதாவது, ஏகாதிபத்தியவாதிகளையும் அவர்களுடைய காவல் நாய்களையும், எப்படி நடத்துவதென்பதே. அன்னிய பிற்போக்குவாதிகளையும் சீனப் பிற்போக்குவாதிகளையும் பொறுத்த வரையில், 'ஆத்திரமூட்டுகிறோம்' என்ற கேள்வி எழ இடமில்லை; ஏனெனில், அவர்களை நாம் ஆத்திரமூட்டினாலும் சரி, ஆத்திரமூட்டா விட்டாலும் சரி, அவர்கள் பிற்போக்குவாதிகளாகவே இருப்பார்கள். பிற்போக்குவாதிகளுக்கும் புரட்சி வீரர்களுக்குமிடையே பாகுபாடு செய்வதின் மூலம்தான், பிற்போக்குவாதிகளின் நோக்கங்களையும் சதிகளையும் அம்பலம் செய்து, அதே சமயத்தில் புரட்சிகர அணிகளில் கண்காணிப்பை நிலைநாட்டுவதன் மூலம்தான், மேலும் நம்முடைய மன உறுதியையுயர்த்துவதன் மூலம்தான், பிற்போக்குவாதிகளைத் தனிமைப்படுத்தி, தோற்கடித்து, ஒழித்துக் கட்டமுடியும். ஒரு மூர்க்க மிருகத்தை எதிர் நோக்கி நிற்கும்பொழுது எவ்விதத்திலும் கோழைத்தனத்திற்கு இடம் தரலாகாது. சின்கயாங் மலைச்சரிவில் தன்னுடைய வெறும் கைகளைக் கொண்டு ஒரு புலியைக் கொன்று வீழ்த்திய யூசங்கிடம் ("மனிதர்கள் யாவரும் சகோதரர்கள்" என்னும் பிரசித்தி பெற்ற சரித்திரபூர்வ நூலின் 108 வீரர்களில் ஒருவன்) நாம் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். புலி, மக்களைக்கொன்று தின்னும்படி ஆத்திர மூட்டப்பட்டாலும் படாவிட்டாலும், அது மக்களைக் கொன்று விழுங்கிவிடுமென்று யூசங் கருதினான். ஒன்று, புலியைக் கொன்று விடவேண்டும், அல்லது அதனால் கொல்லப்படவேண்டும்—இரண்டிலொன்றை நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும்.

"நாங்கள் வியாபாரம் செய்ய விரும்புகிறோம்; எங்களுடன் ஒத்துழைக்கக் கூடாதா?" என்று சிலர் கேட்கின்றனர். ரொம்பவும் சரி; வியாபாரம் நடைபெற வேண்டியதுதான். ஆனால் அதைத் தடுப்பது யார்? நாம் யாரை எதிர்க்கிறோம்? வியாபாரம் செய்ய முடியாமல் நம்மைத் தடுக்கும் நம் நாட்டு பிற்போக்குவாதிகளையும் அயல் நாட்டு பிற்போக்குவாதிகளையும்தான் நாம் எதிர்க்கிறோமே யன்றி மற்றவர்கள் எவரையும் நாம் எதிர்க்கவில்லை. அயல் நாடுகளுடன் வியாபாரம் செய்யாதவாறு நம்மைத் தடுத்து வருபவர்களும், அந்த நாடுகளுடன் ராஜீய உறவுகள் அமைத்துக்கொள்ளாதபடி நம்மைத் தடைசெய்து வருபவர்களும், ஏகாதிபத்திய வெறியர்களும், அவர்களுடைய அடிவருடிகளான பிற்போக்குவாத சியாங்கே-செயிக் கும்பலுமாகுமேயன்றி வேறு எவருமல்ல வென்பதை யாவரும் தெரிந்துகொள்ள வேண்டும். சீனப் பிற்போக்குவாதிகளையும், அயல் நாட்டு பிற்போக்கு வாதிகளையும் அழிக்கும்பொருட்டு நம் நாட்டிலும் பிறநாடுகளிலுமுள்ள சக்திகள் யாவற்றையும் ஒன்று படுத்திய வுடன், வியாபாரம் ஓங்கத் தொடங்கும். மேலும் அயல் நாடுகளுடன் சமத்துவம், பரஸ்பர நலவுரிமை, பிரதேச அரசுரிமைக்கு பரஸ்பர கௌரவம் செலுத்துவது ஆகியவற்றின் அடிப்படையில் ராஜீய உறவுகளை நிறுவிக்கொள்வதும் சாத்தியமாகிவிடும்.

"சர்வதேச உதவி இல்லாமலும் வெற்றிபெற முடியும்" என்று நம்மிடம் கூறுகிறார்கள். இது ஒரு தவறான அபிப்பிராயமாகும். ஏகாதிபத்திய சகாப்தத்தில், சர்வதேச புரட்சிகர சக்திகளிடமிருந்து பல வகைப்பட்ட உதவியுமின்றி, எந்த நாட்டிலும் ஒரு உண்மையான மக்கள் புரட்சி வெற்றியடைந்துவிட முடியாது. மேலும் வெற்றி கிட்டினாலுங்கூட, அவ்வெற்றியை பலமடையச் செய்து காபந்து செய்வதென்பது முடியாமற் போய்விடும். வெகுகாலத்திற்கு முன்பே ஸ்டாலின் நமக்குக் கூறியதைப்போல், மகத்தான அக்டோபர் புரட்சி வெற்றி பெற்றதும், அவ்வெற்றி ஸ்திரமடைந்து திரண்டெழுந்ததும், இதே வழியில்தான். இதே வழியில்தான் மூன்று ஏகாதிபத்திய அரசுகள் அழித்தொழிக்கப்பட்டன; மக்கள் ஜனநாயகங்கள் ஸ்தாபிதமாகியதும் இதே முறையில் தான். சீன மக்களுக்கும் நிலைமைகள் இவ்விதம் தான் இன்று இருந்து வருகின்றன, வருங்காலத்திலும் இவ்வாறுதான் இருக்கும். நாமாகவே ஆலோசனை செய்து பார்ப்போம். சோவியத் யூனியன் இல்லாமலிருந்திருக்குமேயானால், பாசிஸ்ட் எதிர்ப்பு, இரண்டாவது உலக யுத்தத்தில் வெற்றி ஏற்படாமலிருந்திருக்குமேயானால், ஜப்பானிய ஏகாதிபத்தியம் தோற்கடிக்கப் படாமலிருந்திருக்குமேயானால், (நமக்கு இது குறிப்பான முக்கியத்துவம் வாய்ந்ததாகும்) ஐரோப்பாவில் மக்கள் ஜனநாயகங்கள் இல்லாமலிருந்திருக்குமேயானால், கிழக்கிலுள்ள ஒடுக்கப்பட்ட நாடுகளில் வளர்ந்தோங்கி வரும் போராட்டம் இல்லாமலிருந்திருக்குமேயானால், அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் பிரான்சிலும் ஜெர்மெனி

யிலும் இத்தாலியிலும் ஜப்பானிலும் மற்றுமுள்ள முதலாளித்துவ நாடுகளிலும் ஆட்சி செலுத்தும் பிற்போக்குக் கும்பல்களுக்கு எதிராகப் பொதுஜனப் பகுதிகளின் போராட்டம் இல்லாமலிருந்திருக்குமேயானல்—இந்த அம்சங்கள் ஒன்றும் இல்லாமலிருந்திருக்குமேயானல்—சர்வதேசப் பிற்போக்கு சக்திகளின் நிர்ப்பந்தம் கட்டாயம் இன்றிருப்பதை விட மிகவும் அதிகமான பலத்துடன் இருந்திருக்கும். இத்தகைய நிலைமைகளில் நம்மால் வெற்றியடைய முடிந்திருக்குமா? நிச்சயமாக முடிந்திருக்காது. அதைப் போலவே, வெற்றியடைந்த பின்பும், அவ்வெற்றியைப் பலமாக ஸ்திரப்படுத்துவதற்கும் முடியாமற் போயிருக்கும். இவ் விஷயத்தில் சீன மக்கள் செழிப்பான அனுபவம் பெற்றுள்ளனர். சர்வதேச புரட்சிகர சக்திகளுடன் ஒன்றுபடுவது பற்றி சன்யாட்-சன் தான் இறப்பதற்குமுன் கூறிய மொழிகள் இந்த அனுபவத்தைப் பிரதிபலிக்கும் பொன்மொழிகளாக வெகு காலமாக விளங்கி வருகின்றன.

## ஆங்கிலோ—அமெரிக்க உதவி கிடைக்காது

“நமக்கு பிரிட்டிஷ், அமெரிக்க சர்க்கார்களின் உதவி தேனீவ” என்று நம்மிடம் கூறப் படுகிறது. இன்று இது சிறு பிள்ளைத்தனமான பேச்சாகும். இன்று பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் ஏகாதிபத்தியவாதிகள்தான் ஆட்சி புரிகின்றனர். ஒரு மக்கள் அரசாங்கத்திற்கு அவர்கள் உதவி யளிப்பார்களா? இந்த நாடுகளுடன் நாம் வியாபாரம் செய்வோமானல், அல்லது இந்த நாடுகள் ஒருவருக் கொருவர் சாதகமான நிபந்தனைகளின் கீழ் நமக்கு வருங்காலத்தில் கடனுகப் பணம் கொடுக்கத் தயாராயுள்ளனவென்று கருதுவோமேயானல், அதற்குக் காரணம் என்னவாயிருக்கும்? இந்த நாடுகளிலுள்ள முதலாளிகள் செல்வந்தர்களாக விரும்புவது தான் காரணமாயிருக்கும்; பாங்கர்கள் வட்டியைச் சேர்த்து நெருக்கடியைத் தணிக்க விரும்புவது காரணமாக இருக்கும்; சீன மக்களுக்கு அவர்கள் உதவி புரிய விரும்புவது காரணமாக இருக்காது. இந்த நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகளும், மேலும் முற்போக்குக் கட்சிகளும், கோஷ்டிகளும் நம்முடன் வியாபார உறவுகளும் இன்னும் ராஜீய உறவுகளுங்கூட நிருவப்பட வேண்டுமென்று இப்பொழுது இயக்கம் நடத்தி வருகின்றன. இவை சிறந்த நோக்கங்களாகும். நமக்கு இவை உதவியாக இருக்கின்றன. இத்தகைய நடவடிக்கைகளை அந்த நாடுகளிலுள்ள பூர்ஷ்வா வர்க்கத்தினரின் செய்கைகளுக்குச் சம்மானதென்று கருதிவிடக் கூடாது. சன் யாட்-சன் அவருடைய வாழ்நாளில் உதவியை நாடி ஏகாதிபத்திய நாடுகளின் பக்கம் பன்முறை திரும்பினர். ஆனல் அவருடைய முயற்சி பயனற்றதாகியது. உதவி பெறுவதற்குப் பதில், அவர் ஈவிரக்கமின்றி தாக்கப் பட்டார். அவருடைய வாழ்நாளில் சன் யாட்-சன் ஒரே ஒரு முறைதான் சர்வதேச உதவியைப் பெற்றார். இவ் வுதவி சோவியத்



சீன - சோவியத் ஒப்பந்தத்தில் தோழர் விஷின்ஸ்கி கையெழுத்திடுகிருர்.

இடது பக்கத்திலிருந்து: மூன்ருவதாக நிற்பவர் தோழர் **மாலடோவ்**; அவருக்கு வலது பக்கத்தில் தோழர் **ஸ்டாலின்**; இவருக்கு வலது பக்கத்தில் தோழர் **மா ஸே-துங்.**

யூனியனிடமிருந்து கிடைத்தது. டாக்டர் சன் யாட்-சனின் சாசனத்தை வாசகர் படித்துப் பார்க்கலாம். இந்த சாசனத்தில் அவர் ஏகாதியத்திய நாடுகளிடம் உதவியை நாடிச் செல்ல வேண்டாமென்று மக்களுக்கு அறைகூவல் விடுத்தார். "நம்மை ஒரு சரிநிகர் சமானமான தேசத்தினராக நடத்தும் உலக மக்களுடன் ஒன்று சேரும்படி" அவர் மக்களைக் கேட்டுக்கொண்டார். டாக்டர் சன் யாட்-சன் அனுபவம் பெற்றிருந்தார்; அவர் இதற்கு முன்பாகவே ஏமாற்றப் பட்டிருந்தார். நாம் அவருடைய மொழிகளை ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும்; மீண்டும் நாம் ஏமாற்றப்பட்டுவிடுவதற்கு இடமளிக்கக் கூடாது.

சர்வ தேச ரீதியில், நாம் சோவியத் யூனியன் தலைமை வகிக்கும் ஏகாதிபத்திய-எதிர்ப்பு அணியைச் சேர்ந்தவர்களாவோம். நேர்மையான நட்புறவான உதவியை நாம் இந்த அணியிடமிருந்து எதிர்பார்க்க வேண்டுமேயன்றி, ஏகாதிபத்திய அணியிடமிருந்தல்ல.

## மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம்

"நீங்கள் ஒரு சர்வாதிகாரத்தை அமைத்து வருகிறீர்கள்" என்று நம்மிடம் சிலர் கூறுகிறார்கள். ஆம், அன்பார்ந்த கனவான்களே, நீங்கள் கூறுவது உண்மைதான். உண்மையில் நாங்கள் ஒரு சர்வாதிகாரத்தைத்தான் அமைத்து வருகிறோம். மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தை நிறுவுவதின் தேவையை பல ஆண்டுகளாக சீன மக்கள் பெற்றுள்ள அனுபவம் நிரூபணம் செய்கிறது. இதன் பொருள் என்னவென்றால், தங்கள் அபிப்பிராயத்தை வெளியிடும் உரிமையைப் பிற்போக்குவாதிகள் இழந்து விடும்படிச் செய்ய வேண்டும்; வாக்களிக்கும் உரிமையும், தங்கள் அபிப்பிராயத்தை வெளியிடும் உரிமையும் மக்களுக்கு மட்டும்தான் இருக்க வேண்டுமென்பதே. "மக்கள்" என்பவர்கள் யார்? தற்போதய கட்டத்தில் சீனத்தில் தொழிலாளி வர்க்கமும் விவசாயிகளின் வர்க்கமும் குட்டி பூர்ஷ்வாக்களும் தேச பக்த பூர்ஷ்வா வர்க்கத்தினரும்தான் மக்களாவார்கள். இவ் வர்க்கங்கள் தங்களுடைய சொந்த அரசாங்கத்தை அமைத்துக் கொள்ளும் பொருட்டும், ஏகாதிபத்திய கைக்கூலிகளான நிலச் சுவான்கள், அதிகார வர்க்க மூலதன கோஷ்டிகள் ஆகியோரின் வர்க்கத்தின்மீது ஒரு சர்வாதிகாரத்தை ஸ்தாபித்து அவர்களை குறிப்பிட்ட எல்லைகளுக்குள் மட்டும் இயங்கச் செய்து, இவ்வெல்லைகளைச் சொற்களாலோ அல்லது செயல்களாலோ தாண்டிச் செல்லாதபடி தடுத்து அவர்களை ஒழித்துக் கட்டுவதற்காக தங்களுடைய சொந்த சர்க்காரை தேர்ந்தெடுத்துக் கொள்ளும் பொருட்டும், தொழிலாளி வர்க்கத்தின் தலைமையின் கீழும், கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின்கீழும் ஐக்கிய மடைந்தன. ஏகாதிபத்திய கைக்கூலிகளான நிலப்பிரபுக்களும் அதிகாரவர்க்கமூலதனமும் சொற்கள் மூலமோ அல்லது

செயல்கள் மூலமோ இந்த எல்லைக்கு அப்பால் செல்ல முயல்வார்களே யானால் அவர்கள் அவ்வாறு செல்லமுடியாதபடி தடை செய்யப்பட்டு உடனடியாகத் தண்டிக்கப் படுவார்கள். மக்களுக்கு பேச்சு சுதந்திரமும், கூட்டம்போடும் சுதந்திரமும், ஸ்தாபனம் அமைக்கும் சுதந்திரமும் வழங்கப்பட்டு, மக்களிடையே ஜனநாயக முறை கைகூடும் படிச் செய்யப்படவேண்டும். வாக்களிக்கும் உரிமை மக்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறதே யன்றி பிற்போக்குவாதிகளுக்கு அல்ல. மக்களுக்கு ஜனநாயகம், பிற்போக்குவாதிகள் மீது சர்வாதிகாரம் என்னும் இவ்விரு அம்சங்களும் மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தைப் பிரதிநிதித்வப்படுத்துகின்றன.

இத்தகைய அமைப்பு ஒன்றுதான் வேண்டுமென்பதின் அவசியமென்ன? இவ்வாறில்லாவிடில் புரட்சி தோற்கடிக்கப் பட்டுவிடும்; மக்களுக்கு துர்ப்பாக்கியம் ஏற்பட்டுவிடும், அரசாங்கம் அழிவடைந்து விடும் என்பது தெட்டத் தெளிவாக விளங்குகிறது.

"நீங்கள் அரசாங்க அதிகாரத்தை அழிப்பதற்கு விரும்பவில்லையா?" என்று நம்மைக் கேட்கிறார்கள். ஆம், நாங்கள் அவ்வாறுதான் விரும்புகிறோம், ஆனால் இப்பொழுதே அல்ல. தற்போது நம்மால் அரசாங்க அதிகாரத்தை அழித்துவிட முடியாது. ஏன்? ஏனெனில் ஏகாதிபத்தியம் இன்னும் இருந்து வருகிறது, சீன பிற்போக்குவாதிகள் இன்னும் இருக்கின்றனர்; நாட்டில் வர்க்கங்கள் இன்னமும் இருந்துவருகின்றன. மக்கள் அரசாங்க அமைப் பைப் பலப்படுத்துவதுதான் இன்று நம் முன்னுள்ள வேலையாகும். மக்கள் அரசாங்கமென்றால் பிரதானமாக மக்களின் சேனை, மக்களின் போலீஸ், மக்களின் நீதி மன்றங்கள், தேசத்தின் பாதுகாப்பு, மக்களுடைய நல உரிமைகளின் பாதுகாப்பு முதலியவற்றைக் குறிக்கிறது. ஆகவே, இவற்றை நாம் பலப்படுத்த வேண்டும். தொழிலாளிவர்க்கத்தின் தலைமையிலும் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலும் சீனம் இடைவிடாமல் வளர்ச்சிபெற வேண்டுமென்றால், விவசாய நாடாகவுள்ள சீனம் ஒரு இயந்திரத் தொழில் உற்பத்தி நாடாக வளர்ந்து ஓங்கி, புதிய ஜனநாயகத்திலிருந்து அது சோஷலிஸ்ட் சமூகமாகவும் கம்யூனிஸ்ட் சமூகமாகவும் மாறி, வர்க்கங்களை ஒழித்துவிட்டு சர்வதேச சகோதரத்வத்தை ஸ்தாபிதஞ் செய்ய வேண்டுமானால், இது ஒரு அத்தியாவசியமான நிபந்தனையாகும். அரசாங்கத்தின் சேனையும் போலீசும், நீதிமன்றங்களும், வர்க்கங்களை வர்க்கங்கள் அடக்கி ஒடுக்குவதற்கான கருவிகளாகும். எதிரி வர்க்கங்களுக்கு அரசாங்க இயந்திரம் அடக்குமுறைக் கருவியாகும். இது பலாத்காரத்தின் ஆயுதமாகுமேயன்றி "கருணை"யின் கருவியாகாது.

"நீங்கள் கருணை உடையவர்கள் அல்ல" என்று நம்மிடம் கூறுகிறார்கள். இது உண்மையே. பிற்போக்குவாதிகள், பிற்போக்கு வர்க்கங்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகள் சம்பந்தமாக கருணை

காட்டப்படுவதை நாங்கள் தீர்மானமாக எதிர்த்து நிற்கிறோம். மக்களிடம் மட்டும்தான் நாங்கள் கருணை நிறைந்தஆட்சியை நடத்து கிறோம், மக்களுக்கு அப்பாலுள்ள பிற்போக்குவாதிகள், பிற்போக்கு வர்க்கங்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகள் சம்பந்தமாக அல்ல

மக்களின் அரசாங்கம் மக்களைப் பாதுகாத்து நிற்கிறது. மக்கள் அரசாங்க மொன்றின் கீழ்தான் தேசமெங்கும் மக்கள் ஜனநாயக முறைகளைக் கையாண்டு, பூர்ணமாக கல்விகற்று, புத்தறிவு பெற முடியும்; இவ்வாறு சற்றறிவதின் மூலம் அவர்கள் தங்கள் நாட்டி லும் அயல் நாடுகளிலுமுள்ள பிற்போக்குவாதிகளின் செல்வாக்கைத் துடைத்தெறிய முடியும்; (இச்செல்வாக்கு இன்னமும் மிகுந்த பலத் துடன் இருந்து வருகிறது; வருங்காலத்திலும் வெகுநாட்கள் வரையில் நீடித்திருக்கும்; இதை விரைவில் அழித்துவிட முடியாது) பழைய சமூகத்திலிருந்து கற்றுக்கொண்ட கெட்ட பழக்கங்களையும் சித்தாந்தங்களையும் அகற்றித் தள்ள முடியும்; பிற்போக்குவாதிகள் சுட்டிக்காட்டும் தவறான பாதையில் செல்லாமல் சோஷலிஸ்ட், கம்யூனிஸ்ட் சமூகத்தை அமைப்பதற்கான திசையை நோக்கித் தொடர்ந்து முன்னேறி வளர்ச்சியடைய முடியும்.

இந்தத் துறையில் நாங்கள் கையாளும் முறைகள் ஜனநாயக முறைகளாகும். அதாவது, விஸ்வாசத்துடன் புத்தி கற்பிக்கும் முறைகளை அனுசரிக்கிறோமேயன்றி, நிர்ப்பந்தம் செய்யும் பலாத்கார முறைகளை அனுசரிக்கவில்லை. மக்கள் சட்டத்தை மீறுவார்களே யானால், அவர்கள் தண்டிக்கப் படுவார்கள், சிறையிலடைக்கப்படுவார் கள். மேலும் மரண தண்டனைகூட விதிக்கப்படலாம். ஆனால் இவைகள் யாவும் தனி நபர்கள் சம்பந்தமாக ஏற்படும் சம்பவங்களா கும்; பிற்போக்கு வர்க்கத்திற்கு எதிராக வர்க்க ரீதியில் நடத்தப் படும் சர்வாதிகாரத்திலிருந்து சாராம்சத்தில் மாறுபட்டவையாகும்.

## பிற்போக்குவாதிகளின் எதிர்காலம்

பிற்போக்குவாதிகளின் அரசியல் ஆட்சி ஒழிக்கப்பட்ட பின்பு, பிற்போக்கு வர்க்கத்திற்கும் பிற்போக்குக் கும்பலுக்குங் கூட, நிலமும் வேலையும் ஜீவனம் செய்வதற்கான பண்டங்களும் கொடுக்கப்படும். வேலை செய்து அதன் மூலம் அவர்கள் திரும்பவும் கற்றுக்கொண்டு புத்தறிவு பெறும் பொருட்டு, அவர்களுக்கு இவை யாவும் கொடுக்கப்படுகின்றன. அவர்கள் கலகம் செய்யவோ, அழிவை உண்டாக்கவோ, அல்லது நாசவேலை செய்யவோ முயற்சிக்கக் கூடா தென்னும் நிபந்தனையின் கீழ் அவர்களுக்கு இவை தரப்படுகின்றன. அவர்கள் வேலை செய்ய மறுப்பார்களே யானால், மக்களின் அரசாங் கம் அவர்களை வேலை செய்யும்படி பலவந்தம் செய்யும். மேலும், நாம் கைதிகளாகப் பிடித்த ராணுவ ஆபீசர்களிடம் செய்யப்பட்டது

போலவே, இவர்களிடமும் அரசியல் நடவடிக்கைகளும், பிரசார நடவடிக்கைகளும், கல்வி கற்பிக்கும் நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ளப்படும். பிற்போக்கு வர்க்கங்களிடையில் செய்யப்படும் இந்த வேலையையும் நாம் கருணை நிறைந்த ஆட்சியின் வேலையே என்று கருதலாம். ஆனால், முன்பு எதிரி வர்க்கங்களாக இருந்தவைகளைப் பொறுத்தவரையில் இந்த வேலை பலாத்காரத்தின் மூலமாகவே நடைபெறும். ஆகவே இந்த வேலையை புரட்சிரமான மக்களிடையே நாம் செய்துவரும் கல்வி கற்பிக்கும் வேலைக்குச் சமமானதென்று கருதிவிடக் கூடாது. மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தினுடைய அரசாங்க மொன்றில்தான் இவ்வாறு பிற்போக்கு வர்க்கங்களுக்கு கல்வி கற்பித்து, புத்தறிவு ஊட்ட முடியும்.

இந்த வேலை ஒழுங்காக செய்து முடிக்கப்படுமேயானால், சீனத்திலுள்ள பிரதானமான சுரண்டல் வர்க்கங்கள்—அதாவது நிலச்சுவான்களின் வர்க்கமும் அதிகார வர்க்க மூலதனம் அல்லது ஏகபோக மூலதனத்தின் வர்க்கமும்—இறுதியில் அழிக்கப்பட்டுவிடும். மற்றொரு சுரண்டல் வர்க்கமான தேச பக்த பூர்ஷ்வா வர்க்கத்தைப் பொறுத்தவரையில், அதைச் சேர்ந்தவர்களிடம் தற்போதைய கட்டத்தில் விரிவான முறையில் கல்வி கற்பிக்கும் வேலை நடத்தப்படவேண்டும். சோஷலிசம் கைகூடிய பின்பு, அதாவது, தனி நபர்களைச் சேர்ந்த தொழில்கள் தேச உடைமையாக்கப்பட்டவுடன், தேச பக்த பூர்ஷ்வா வர்க்கம் மேலும் கல்வி கற்று புத்தறிவு பெறுவதற்கு முடியும். மக்கள் தங்களுடைய கையில் ஒரு பல மிகுந்த அரசாங்க இயந்திரத்தை வைத்திருக்கின்றனர்; ஆகவே அவர்கள் தேச பக்த பூர்ஷ்வா வர்க்கம் கலகம் செய்துவிடுமென்று அஞ்சவில்லை.

விவசாயி வர்க்கத்திற்குக் கல்வி கற்பிப்பதென்பது ஒரு கடினமான பிரச்னையாக விளங்குகிறது. விவசாயிகளின் பண்ணைகள் சிதறிக் கிடக்கின்றன. சோவியத் யூனியனின் அனுபவத்தைக் கொண்டு பார்ப்போமானால் விவசாயத்தை சோஷலிசமயமாக்குவதற்கு மிக அதிகமான நேரமும் உழைப்பும் தேவையாகுமென்பது புலப்படுகிறது. விவசாயத்தை சோஷலிஸ்ட் மயமாக்காமல், பரிபூரணமான நிரந்தரமான சோஷலிசம் நிலவ முடியாது. விவசாயத்தை சோஷலிசமயமாக்குவதற்கு, அரசாங்கத் தொழில்களை நடுமையமாகக் கொண்டு ஒரு பலமிகுந்த இயந்திரத் தொழிலை வளர்த்தாகவேண்டியது அத்தியாவசியமாகும். நாட்டை இயந்திரத் தொழில் மயமாக்குவதென்னும் இப்பிரச்னையை மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தின் அரசாங்கம் படிப் படியாக பைசல் செய்தாக வேண்டும். இக்கட்டுரை பொருளாதார பிரச்னைபற்றிய கட்டுரை அல்ல ஆகவே இந்த விஷயம்பற்றி நான் அதிகமாகக் கூறப்போவதில்லை.

1924-ல் நடைபெற்ற முதலாவது தேசிய கோமிங்டாங் காங்கிரஸ் சன் யாட்-சன்னால் நேரில் வழிகாட்டப்பட்டது. கம்யூனிஸ்ட்டுகள்

அதில் பங்கெடுத்துக் கொண்டனர். இந்த காங்கிரசில் கோமிங் டாங்கின் பிரசித்தி பெற்ற அறிக்கை நிறைவேற்றப் பட்டது. இந்த அறிக்கை கூறுவதாவது: "நவீன நாடுகளில் இருப்பதாகக் கூறப் படும் ஜனநாயக அமைப்பு அடிக்கடி பூர்ஷ்வா வர்க்கத்தின் ஏக போக உரிமையாக்கப்பட்டுவிடுகிறது; மக்களை அடக்கி ஒடுக் கும் கருவியாக மாற்றப்பட்டுவிடுகிறது. ஆனல் கோமிங்டாங்கின் ஜனநாயகம் மக்கள் அனைவருக்கும் சொந்தமான பொதுச் சொத்தா கும்; ஒரு சிறுபான்மை வகுப்பின் சொந்தச் சொத்து அல்ல." யார் தலைமை வகிக்கவேண்டும், யார் தலைமை வகிக்கப்படவேண்டும் என்னும் கேள்வியை விலக்கிவிட்டு, ஒரு பொதுவான அரசியல் திட்டத்தின் கோணத்திலிருந்து பார்ப்போமாயின், இத்தகைய ஜன நாயகம் நாம் கூறிவரும் மக்கள் ஜனநாயகம் அல்லது புதிய ஜனநாய கம் என்பதுடன் ஒத்திருக்கிறது. பூர்ஷ்வா வர்க்கத்தினரின் சொந்தச் சொத்தாக இல்லாமல் மக்களின் பொதுச் சொத்தாக இருக்கும் அர சாங்க அமைப்புடன் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையைக் கூட்டிக் கொள்வோமேயானல், இந்த அரசாங்க அமைப்பானது மக்கள் ஜன நாயக சர்வாதிகாரமாகிவிடும். சியாங்கே-செயிக் சன்யாட்-சன்னுக்கு துரோகம் செய்துவிட்டு, அதிகாரவர்க்க மூலதனம், நிலச் சுவான்தார் கள் ஆகியோரின் சர்வாதிகாரத்தை ஆயுதமாக பிரயோகித்துக் கொண்டு சீனமக்களை அடக்கி ஒடுக்கினன். இந்த எதிர்ப் புரட்சி சர் வாதிகாரம் 22 ஆண்டுகள் நடைபெற்றது. இப்பொழுது அது நம் முடைய தலைமையின் கீழ் சீனமக்களால் ஒழிக்கப்பட்டுள்ளது.

## "சர்வாதிகாரமும்", "யதேச்சாதிகாரமும்"

அயல் நாட்டு பிற்போக்குவாதிகள் "சர்வாதிகாரம்", "எதேச் சாதிகாரம்" என்றெல்லாம் கூறி நம்மைப்பற்றி குற்றப் பத்திரிகை படிக்கிறார்கள். ஆனல் உண்மையில் தொழிலாளி வர்க்கத்திற்கும் மக்களின் மற்றப் பகுதிகளுக்கும் எதிராக ஒரு வர்க்கத்தின், அதா வது, பூர்ஷ்வா வர்க்கத்தின் சர்வாதிகாரத்தையும், எதேச்சாதி காரத்தையும் நடத்தி வருபவர்கள் இவர்களே ஆவர். நவீன நாடுகளில் மக்களை அடக்கி ஒடுக்கும் பூர்ஷ்வாக்களின் வர்க்க மென்று சன் யாட்-சன்னல் விவரிக்கப்பட்டவர்கள் இதே ஆசாமிகள் தான். சியாங் கே-செயிக் தன்னுடைய பிற்போக்குவாத நண்பர்க ளான இவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றித்தான் தனது எதிர்ப் புரட்சி சர்வாதிகாரத்தை நிறுவினன். சுங் வம்சத்தினரின் தத்துவ சாஸ்திரிகளில் ஒருவரான சூ இசி என்பவர் பல புத்தகங்களை எழுதி ஞர், பல பிரசங்கங்களையும் ஆற்றினர். இவற்றை நாம் முன்பே மறந்து விட்டோம். ஆனல் அவர் கூறியவற்றுள் ஒன்றை மட்டும் நாம் எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துள்ளோம்: "பிறர் உங்க ளுக்குச் செய்வதைப் போலவே நீங்கள் அவர்களுக்குச் செய்யுங்கள்." இதையேதான் நாம் இன்று செய்து வருகிறோம். இதன் பொருள்

என்னவென்ருல், ஏகாதிபத்தியவாதிகளையும் அவர்களுடைய கையாட்களையும், அதாவது பிற்போக்குவாத சியாங் கே-செயிக் கும்பலையும், அவர்கள் மற்றவர்களை நடத்திய மாதிரியே, நடத்த வேண்டும். இதையேதான் நாம் செய்கிறேமே யன்றி வேறென்று மல்ல.

புரட்சிகரமான சர்வாதிகாரமும் எதிர்ப்புரட்சி சர்வாதிகாரமும் ஒன்றுக்கொன்று நேர்முரணனவையாகும். முன்னது பின்னதி லிருந்து கற்றுக்கொண்டது. இந்த படிப்பு மிகுந்த முக்கியத்வம் வாய்ந்ததாகும். ஏனெனில், புரட்சிகர மக்கள், எதிர்ப் புரட்சி வர்க் கங்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கான வழி முறைகளைக் கற்று அவற்றில் பாண்டித்தியமடையாவிடில், அம் மக்களால் தங்களுடைய ஆட்சியைக் காப்பாற்றிக்கொள்ள முடியாமற் போய்விடும்; சீன பிற் போக்குவாதிகள், அன்னிய பிற்போக்குவாதிகள் ஆகியோரின் கும்பல் அந்த ஆட்சியை ஒழித்துக் கட்டிவிடும்; இந்த பிற்போக்குக் கும்பல் அதன்பின் சீனத்தில் தங்களுடைய ஆதிக்கத்தை மீண்டும் ஸ்தாபித்து, புரட்சிகர மக்களை துர்ப்பாக்கியத்தில் ஆழ்த்திவிடு வார்கள்.

தொழிலாளி வர்க்கம், விவசாயிகள், நகர குட்டி பூர்ஷ்வாக்கள் ஆகியோரின் கூட்டணிதான், முக்கியமாக தொழிலாளி, விவசாயி வர்க்கங்களின் கூட்டணிதான், (ஏனெனில், சீனத்தின் ஜனத்தொகை யில் 80 விருந்து 90 சதமானம் வரை விவசாயிகளாவர்), மக்கள் ஜன நாயக சர்வாதிகாரத்தின் அடிப்படையாக அமைந்துள்ளது. பிரதான மாக, தொழிலாளி விவசாயி வர்க்கங்களின் சக்தியினுல்தான் ஏகாதி பத்தியமும், கோமிங்டாங் பிற்போக்குவாத கும்பலும் தோற்கடித்து வீழ்த்தப்பட்டன. புதிய ஜனநாயகத்திலிருந்து சோஷலிஸத்திற்கு மாறிச் செல்வதும் பிரதானமாக இவ்விரு வர்க்கங்களின் கூட்டணி யைப் பொறுத்தே இருக்கிறது.

## தொழிலாளி வர்க்கத் தலைமையின் அவசியம்

மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்திற்கு தொழிலாளி வர்க்கம் தான் தலைமை வகிக்கவேண்டும். ஏனெனில், தொழிலாளி வர்க்கம் ஒன்றுதான் மிகவும் தீர்க்கதரிசியான, நியாயமான, சுயநலமற்ற, முன்பின் முரணின்றி, புரட்சிகரமாக இயங்கும் வர்க்கமாகும். தொழிலாளி வர்க்கத்தின் தலைமை இல்லாவிட்டால் புரட்சி தோல்வி யுற்றே தீருமென்பதைத்தான் எல்லா புரட்சிகளின் சரித்திரமும் எடுத்துக் காட்டுகிறது. ஆனல் தொழிலாளிவர்க்கம் தலைமை தாங்குமேயானுல், புரட்சி வெற்றி யடைந்துவிடும். ஏகாதிபத்திய சகாப்தத்தில் எந்த நாட்டிலும் வேறெந்த வர்க்கமும் உண்மையான புரட்சி ஒன்றிற்குத் தலைமை வகித்து, அதை வெற்றிக்கு அழைத் துச் சென்றுவிட முடியாது. பல சமயங்களில் சீன குட்டி பூர்ஷ்

வாக்களும், தேசிய பூர்ஷ்வா வர்க்கத்தினரும் புரட்சிக்குத் தலைமை தாங்கினார்கள். ஆனால் எப்பொழுதும் அவை தோல்வியில்தான் முடிவுற்றன ; நாம் மேலே கூறியதை இவ்வுண்மை தெட்டத் தெளிவாக நிரூபிக்கிறது.

தற்போதய கட்டத்தில் தேச பக்த பூர்ஷ்வா வர்க்கம் மிகவும் முக்கியமானதாகும். ஏகாதிபத்தியம் இன்னமும் நம் முன்பே நின்று கொண்டிருக்கிறது. அது ஒரு கொடிய மிருகமாகும். சீனம் உண்மையான பொருளாதார சுதந்திரத்தை பெறுவதற்கு இன்னும் அதிக காலம் தேவையாயிருக்கும். சீனத்தின் தொழில் வளர்க்கப்பட்டு, இனி நம் நாடு பொருளாதார ரீதியில் அன்னிய அரசுகளைச் சார்ந்து இருக்க வேண்டியதில்லை என்னும் நிலை ஏற்படும்பொழுது தான், உண்மையான பரிபூர்ணமான சுதந்திரத்தைப் பெறுவது சாத்தியமாகும். சீனத்தின் தேசப் பொருளாதாரத்தில் நவீன இயந்திரத் தொழிலின் விகிதாச்சாரம் இன்னமும் சொற்பமாகவே இருந்துவருகிறது. முடிவான புள்ளி விபரங்கள் நமக்கு இன்னும் கிடைக்கவில்லை. ஆனால் சில புள்ளி விபரங்களிலிருந்து, நாட்டின் தேசப் பொருளாதாரத்திலுள்ள பொதுவான தொழில் உற்பத்தியில் இயந்திரத் தொழில் உற்பத்தியின் விகிதம் சுமார் 10 சதமானம் தான் ஆகுமென்று மதிப்பிட முடியும். ஏகாதிபத்திய வாதிகளின் நிர்ப்பந்தத்தை எதிர்த்து நிற்கும் பொருட்டும், பின் தங்கியிருக்கும் பொருளாதாரத்தை ஒரு படி முன்னேறும்படிச் செய்யும் பொருட்டும், தேசப் பொருளாதாரத்திற்கு நன்மை பயக்கக்கூடிய, மேலும் மக்களின் வாழ்க்கைத்தரத்திற்குக் குந்தகம் விளைவிக்காமலிருக்கும் நகரங்களிலும் கிராமங்களிலுமுள்ள ஒவ்வொரு முதலாளித்துவத் தொழிலையும் சீனம் உபயோகப் படுத்திக் கொள்ளவேண்டும். தேச பக்த பூர்ஷ்வா வர்க்கத்துடன் சீனம் ஒரு பொதுப் போராட்டத்தில் ஒன்றுபடவேண்டும். தற்போழுது, முதலாளித்துவத்தைக் கட்டுப்படுத்திக் குறைப்பதென்பதுதான் நம்முடைய கொள்கையே அன்றி அதை அழித்துவிடுவதென்பதல்ல.

இருந்தபோதிலும் தேசபக்த பூர்ஷ்வா வர்க்கம் புரட்சியின் தலைவனாக இருக்க முடியாது ; இன்னும் பார்க்கப் போனால், அரசாங்கத்தில் அது ஒரு முக்கிய இடம் பெறுவதென்பது முடியாது. ஏனெனில், தேசபக்த பூர்ஷ்வா வர்க்கத்தின் சமூகப் பொருளாதார நிலைமை அதன் பலவீனத்தையும், முன்னோக்கும் பார்வையின்மையையும், தைரியமின்மையையும், பொது மக்களிடம் அதற்குள்ள அச்சத்தையும் (அதன் பிரதிநிதிகள் பலராலும் இவ்வச்சம் வெளியிடப்படுகிறது) நிர்ணயிக்கிறது. "பொது ஜனப் பகுதிகளைத் தட்டியெழுப்ப வேண்டும்" என்றும், "விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் உதவி புரிய வேண்டும்" என்றும் சன்யாட்-சன் கூறினார். அவர்களைத் தட்டி யெழுப்பி உதவி புரிய விரும்புபவர்கள் யார்? குட்டி பூர்ஷ்வாக்களும், சேதபக்க பூர்ஷ்வா வர்க்கத்தினரும் இதைச்

செய்ய வேண்டுமென்று சன்யாட்-சன் கருதினர். ஆனால் இது நடைமுறையில் கைகூடும் காரியமல்ல. நாற்பது ஆண்டுகள் சன்யாட்-சன் புரட்சிகரமாகச் செயலாற்றியதெல்லாம் தோல்வியில் முடிவுற்றது. காரணமென்ன? ஏகாதிபத்திய சகாப்தத்தில் குட்டி பூர்ஷ்வாக்களும் தேசபக்த பூர்ஷ்வா வர்க்கத்தினரும் உண்மையான புரட்சி எதற்கும் வெற்றிகரமாகத் தலைமை வகிக்க முடியாது என்பதுதான் காரணமாகும். நம்முடைய 28 ஆண்டு அனுபவம் முற்றிலும் மாறுபட்டதாகும். மதிப்பிடுவதற்கரிய அனுபவம் நமக்குக் கிடைத்துள்ளது. இந்த அனுபவத்தின் சாராம்சம் கீழ்க்கண்ட மூன்று அம்சங்களில் அடங்கியுள்ளது:—

1. மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோரின் தத்துவத்தை போராயுதமாகக்கொண்டுள்ள, சுயவிமர்சன மென்னும் முறையை உபயோகித்து வரும், பொதுஜனப் பகுதிகளுடன் நெருங்கிப் பிணைக்கப்பட்டுள்ள, கட்டுப்பாடு மிகுந்த ஒரு கட்சி; 2. இந்த கட்சியினால் தலைமை வகிக்கப்படும் ஒரு சேனை; 3. இந்த கட்சித் தலைமையின் கீழ் சமூகத்தின் பல்வேறுபட்ட புரட்சிகரப் பகுதிகள், கோஷ்டிகள் ஆகியவற்றின் கூட்டணி.

இந்த மூன்று அம்சங்களும் நம்மை நம்முடைய முன்னோர்களிடமிருந்து வேறுபட்டவர்களாகச் செய்கின்றன. இந்த மூன்று அம்சங்களையும் நமக்கு அடிப்படியாக அமைத்துக்கொண்டு, நாம் பிரதான வெற்றியைப் பெற்றோம்; ஒரு கடினமான பாதையைக் கடந்து சென்றோம்; கட்சியினுள்ளே வலது சாரி சந்தர்ப்பவாத போக்குகளையும் இடது சாரி சந்தர்ப்பவாதப் போக்குகளையும் எதிர்த்து ஒரு போராட்டம் நடத்தினோம். கடுமையான தவறுகள் செய்யப்பட்டபொழுது புரட்சிக்குத் தடங்கல் ஏற்பட்டது. இந்தத் தவறுகளிடமிருந்தும் தோல்விகளிட மிருந்தும் நாம் பாடம் கற்று அறிவை விசாலம் செய்துகொண்டோம். இவ்விதம் நாம் முன்னை விட சிறப்பாகச் செயலாற்ற முடிந்தது. தவறே செய்யாத கட்சியோ அல்லது தனி நபரோ கிடையாது. ஆனால் தவறுகள் குறைய வேண்டுமென்று நாம் கோருகிறோம். தவறு ஒன்று செய்யப் படுமேயனால், அது திருத்தப்பட்டுவிடவேண்டும். எவ்வளவு சீக்கிரமாகவும் பரிபூர்ணமாகவும் அது திருத்தப்படுகிறதோ அவ்வளவிற்கு நன்மை யுண்டாகும். நம்முடைய அனுபவத்தைக் கீழ்க்கண்டவாறு சுருக்கிக் கூறலாம்: தொழிலாளி வர்க்கத்தினால் (கம்யூனிஸ்ட் கட்சியின் மூலம்) தலைமை வகிக்கப்படும் தொழிலாளர்கள் விவசாயிகள் கூட்டணி ஒன்றை அடிப்படையாகக் கொண்டுள்ள மக்கள் ஜன நாயக சர்வாதிகாரம் வேண்டும். இந்த சர்வாதிகாரம் சர்வதேச புரட்சிகர சக்திகளுடன் உடன்பாடு கொண்டிருக்கவேண்டும். இதுதான் நம்முடைய சூத்திரம்; நம்முடைய தலையான அனுபவம்; நம்முடைய பிரதான வேலைத்திட்டம்.

நம்முடைய கட்சி அதன் 28 வது ஆண்டு வாழ்வில் ஒரு காரியத்தைச் செய்துள்ளது—புரட்சிகரப் போராட்டத்தில் பிரதான வெற்றியை அது பெற்றுள்ளது. இது குறிப்பிடத்தக்க தொரு வெற்றியாகும். ஏனெனில் இது மக்களுக்குக் கிடைத்துள்ள ஒரு வெற்றியாகும், சீனத்தைப் போன்ற மாபெரும் ஒரு நாட்டில் ஏற்பட்டுள்ள வெற்றியாகும்.

## நிர்மாண வேலைத்திட்டத்திலும் வெற்றி நிச்சயம்

ஆனால் இன்னும் நம் முன் ஏராளமான வேலை இருக்கிறது. சென்ற காலத்தில் நாம் சாதித்துள்ளது யாவும் 10,000 மைல் யாத்திரையின் முதலாவது தப்படியைத்தான் குறிப்பிடுகிறது. இன்னும் நாம்விரோதியின் மிச்ச சொச்சங்களை ஒழித்தாகவேண்டும். மேலும் பொருளாதார நிர்மாணமென்னும் கடுமையான வேலை நம்மை எதிர்நோக்கி நிற்கிறது. நாம் நன்றாகப் பழகிப் பரிச்சயமடைந்துள்ள வேலை சீக்கிரத்தில் முடிவடைந்துவிடும்; ஒரு புத்தம் புதிய வேலையில் நாம் இறங்கவேண்டி யிருக்கும். சிக்கலான இடம் இங்குதான் இருக்கிறது. நம்மை எதிர் நோக்கியுள்ள பொருளாதார வேலையைச் செய்து முடிப்பதற்கு நாம் திறமை யற்றவர்களாவோமென ஏகாதிபத்திய வாதிகள் எண்ணுகின்றனர். அவர்கள் நம்மைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள், நாம் தோல்வி யடைந்துவிடுவோமென்று காத்துக் கொண்டிருக்கிறார்கள். பல கஷ்டங்களையும் நாம் தாண்டிச் சென்றாக வேண்டும். புதிதாக இருக்கு மொன்றை நாம் கற்று பாண்டித்யம் பெற்றாக வேண்டும். பொருளாதாரத் துறையில் நாம் எல்லோரிடமிருந்தும்—அவர்கள் யாராயிருந்தபோதிலும் சரி—வேலை செய்வதற்குக் கற்றுக்கொள்ளவேண்டும். நாம் அவர்களை நம்முடைய உபாத்தியாயர்களென்று ஏற்றுக்கொண்டு, அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளவேண்டும். நாம் அதிகாரத் திமிர் பிடித்தவர்களாகி விடக் கூடாது. இந்த வேலையை நாம் செய்தாகவேண்டும்; இறுதியில், விடா முயற்சியின் பயனாக, பல மாதங்களிலோ. அல்லது ஓரிரண்டு ஆண்டுகளிலோ அல்லது நான்கு ஐந்து ஆண்டுகளிலோ நாம் தேர்ச்சிபெற முடியும்.

சோவியத் யூனியனிலும் ஆரம்பத்தில் பொருளாதாரத் துறையில் எப்படி வேலை செய்வதென்பது பல கம்யூனிஸ்ட்களுக்குத் தெரியாமலிருந்தது. அப்பொழுதுகூட ரஷ்யர்கள் தோற்று விடுவார்கள் என்றுதான் ஏகாதிபத்தியவாதிகள் எதிர்பார்த்தார்கள். ஆனால் சோவியத் யூனியனில் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி பெற்றது. அது லெனின், ஸ்டாலின் தலைமையில் புரட்சிகர வேலையை மட்டுமின்றி, புனர்நிர்மாண வேலையையும் செய்து முடித்தது. அதற்குள்ளாகவே அது ஒரு மகத்தான உன்னத சோஷலிஸ்ட் அரசாங்கத்தைக் கட்டி அமைத்துவிட்டது. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட்

கட்சி நமக்கு மிகச் சிறந்த ஆசிரியராக விளங்குகிறது. அதனிடமிருந்து நாம் பாடங் கற்றுக்கொள்ள வேண்டும். சர்வதேச நிலைமையும் உள்நாட்டு நிலைமையும் நமக்குச் சாதகமாக இருக்கின்றன. பிற்போக்குவாதிகளைத் தவிர, நாடு பூராவிலுமுள்ள மற்ற மக்கள் அனைவரையும் ஐக்கியப் படுத்தி, நமது லட்சியத்தை நோக்கித் தயக்கமின்றி முன்னேறிச் செல்வதற்கு, நாம் மக்கள் ஜனநாயக சர்வாதிகாரமென்னும் ஆயுதத்தை பூரணமாக நம்பி இருக்கலாம்.



இம்மாத இறுதிக்குள் வெளிவருகிறது

# லெனினிஸத்தின் அடிப்படை அம்சங்கள்

## ஜே. வி. ஸ்டாலின்

ஏகாதிபத்திய சக்திகளை எதிர்த்து உலகமெங்கும் போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கும் சகல மக்களுக்கும், கடந்த கால் நூற்றாண்டாக தத்துவார்த்த ஆயுதமாக உள்ளது இந்த நூல். முதன் முறையாக தற்போதுதான் தமிழில் வெளிவருகிறது.

பல லட்சக்கணக்கான மக்களின் மனதில் எழும் எத்தனையோ சந்தேகங்களையும், பிரச்சினைகளையும் ஸ்டாலின் இந்த நூலில் தெளிவாக, விரிவாக வெட்டொன்று, துண்டிரண்டாக விளக்கியுள்ளார்.

ட்ராட்ஸ்கிய வாதத்தையும், தொழிலாள வர்க்கக் கட்சியை சிறுமைப் படுத்துவோரையும் முறியடிக்கின்றது ஸ்டாலின் விளக்க வுரைகள்.

"லெனினிஸம், சர்வதேச ரீதியாக ஜெயக்கொடி நாட்டும் என்ற நம்பிக்கையை இந்த நூல் நமக்கு ஊட்டும்.

ஒவ்வொரு தொழிலாளியும், விவசாயியும், ஏகாதிபத்திய - எதிர்ப்பு வாதியும் தவறாமல் படிக்கவேண்டிய நூல் இது.

★

**விலை ரூ. 1 4 0**

பிரதிகளுக்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்

★

**பீப்பிள்ஸ் பப்ளிஷிங் ஹவுஸ் லிட்.,**
(புருஷோத்தம் பில்டிங்ஸ்)
**மவுண்ட் ரோட், சென்னை - 2**

Printed at Shanti Press, 134/135, Coral Merchant Street, Madras 1